1995 ஏப்ரல் 7]

கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், ஒவ்வொரு ரகத்திற்கும் எவ்வளவு லாபம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இர்ரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92-இல், 1,30,60,000 ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 1992-93-இல், 1,27,76,000 ரூபாய்க்கு வந்திருக்கிறது. 1993-94-இல் ரூ. 1,47,11,000-க்கு வாங்கியிருக்கிறோம். 1994-95-இல் ரூ. 1,55,53,000-க்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. நெசவாளர் சங்கங்களின் மூலமாகத்தான் முழுமையாகக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. ஜனதா ரக வேட்டி ரகங்களுக்கு 9.5 சதவிகிதமும், பருத்தி மற்றும் பாலியஸ்டர் ரகங்களுக்கு 14.5 சதவிகிதமும், பட்டு ரகங்களுக்கு 12.5 சதவிகிதமும் இலாபம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 272, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

272—

பனந்தோப்புமயிலில் சத்துணவு மையம் அமைத்தல்.

***35659—**டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதி, அன்னூர் ஊராட்சி ஒன்றியம், அன்னூர் பேரூராட்சி, பனந்தோப்புமயில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் சத்துணவு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று உரைத்திருக்கிறார்கள். அவினாசி தொகுதி என்பது, 80% ஆதிதிராவிடர் மக்கள் வாழக்கூடிய தொகுதி. அன்னூர் ஒன்றியத்தில், பனந்தோப்புமயில் என்ற கிராமத்தில் சுமார் 100 குடும்பங்களும், அதனையொட்டி 40 குடும்பங்களும் வசித்து வருகிறார்கள். சுமார் 125 குழந்தைகள் அங்கே

உள்ளன. கல்லின் அடியிலே இருக்கிற தேரைக்கும் உணவு என்று கடவுள் தந்ததைப் போல, கர்ப்பப் பையில் இருக்கிற கருவுக்குக்கூட உணவு அளிக்கின்ற வகையில், கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்துணவு தந்திட்ட நம்முடைய கலியுக தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆதிதிராவிடர் குழந்தைகளுக்கு ஒரு சத்துணவுக் கூடம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னூர் ஒன்றியத்திலே மட்டும் குழந்தைகள் சத்துணவு மையங்கள் 39-ம், பள்ளி சத்துணவு மையங்கள் 94-ம் இருக்கின்றன. ஓரிடத்தில் சத்துணவு மையம் துவங்க வேண்டுமானால், ஆயிரம் பேர் குடியிருக்க வேண்டும். அதிலே 25 குழந்தைகளாவது சாப்பிடுவதற்கு வரவேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இடத்தில், ஆதிதிராவிடர் குடியிருப்பான பனந்தோப்புமயில் என்ற இடத்தில், 45 வீடுகள் மட்டுமே இருக்கின்றன. 4 வயதுள்ள குழந்தைகள் மொத்தம் 9 பேர் இருக்கிறார்கள். ஆனால், ஒரு பர்லாங் தூரத்தில் நாகம்மாபுதூரில் குழந்தைகள் நல மையம் இயங்கி வருகிறது. ஆனாலும்கூட இந்த குழந்தைகள் நல மையத்திற்கு இந்தப் பகுதியிலே இருந்து செல்ல வேண்டும் என்றால் ஒரு ரோட்டை கடந்து அடுத்த பகுதிக்கு செல்ல வேண்டி இருக்கிறது. அதனால், குழந்தைகள் விபத்துக்குள்ளாக நேரும் என்கின்ற காரணத்தால், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எந்தக் குழந்தையும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதால், இந்த ஆண்டிலே இருந்து அங்கே இருக்கிற 9 குழந்தைகளுக்கும் உணவு அளிப்பதற்கு மாதம் 15 ரூபாய் வீதம் ஒரு வருடத்திற்கு 180 ரூபாய் செலவு செய்து ஒரு ஆயாவை நியமித்து அந்த 9 குழந்தைகளுக்கும் அங்கேயே உணவு அளிக்கச் சொல்லி இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் **10-55**

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அருமையான ஒரு யோசனையைச் சொல்லி, அங்கே இருக்கின்ற குழந்தைகளின் பாதுகாப்பைக் கருதி, அந்த 9 குழந்தைகளுக்காக ஒரு ஆயாவை நியமித்து சோறு போட இருக்கின்ற எங்கள் அன்னைக்கு அவினாசி தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, ஆலகால விஷத்தைக் கக்கி உலகத்தையே அழிக்க நினைத்த ஆதிசேஷன் என்ற பாம்பை கொன்று கடல்நீரை அமுதமாக்கிய கண்ணனைப் போல

இன்றைக்கு எத்தனை அக்கிரமங்கள் சூழ்ந்தாலும், எத்தனை வக்கிரங்கள் வந்தாலும், அத்தனையையும் தூள் தூளாக்கி, தமிழகம் மட்டுமின்றி இந்தியாவையே காக்கவல்ல எங்கள் வருங்கால பாரதப் பிரதமர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோல அவினாசி தொகுதியில் வடுகம்பாளையம், இந்திராநகர், காளியம்பாளையம், ரங்கசமுத்திரம், பள்ளிப்பாளையம் மற்றும் அனைத்து கிராமங்களிலும் இதுபோன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவு மையங்களை உருவாக்குவதற்கு என்னென்ன அடிப்படை இருக்க வேண்டுமோ அவை எல்லாம் இருந்தால் நிச்சயமாக அவை எல்லாம் பரிசீலிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 273, திரு. பி. வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 274, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

274—

சேரிபாளையம் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்

***11070—**திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு தொகுதி, சேரிபாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS